ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

# நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ உண்ணுஞ்சோறு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உண்ணுஞ்சோறு ॥

## தலைவனது நகர்நோக்கிச் சென்ற மகளைக் குறித்துத் தாய் இரங்குதல்

‡உண்ணும் சோறு பருகுநீர்⋆ தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன்⋆ எம் பெருமான் என்றென்றே⋆ கண்கள் நீர் மல்கி⋆
மண்ணினுள் அவன் சீர்⋆ வளம் மிக்கவன் ஊர் வினவி⋆
திண்ணம் என் இளமான் புகும் ஊர்⋆ திருக்கோளூரே (1)

ஊரும் நாடும் உலகமும்⋆ தன்னைப்போல் அவனுடைய⋆
பேரும் தார்களுமே பிதற்றக்⋆ கற்பு வான் இடறி⋆
சேரும்நல் வளம் சேர்⋆ பழனத் திருக்கோளூர்க்கே⋆
போரும் கொல் உரையீர்⋆ கொடியேன் கொடி பூவைகளே (2)

பூவை பைங்கிளிகள்⋆ பந்து தூதை பூம் புட்டில்கள்⋆
யாவையும் திருமால்⋆ திருநாமங்களே கூவியெழும்⋆ என்
பாவை போயினித்⋆ தண் பழனத் திருக்கோளூர்க்கே⋆
கோவைவாய் துடிப்ப⋆ மழைக் கண்ணொடென்
செய்யுங்கொலோ (3)

கொல்லை என்பர்கொலோ⋆ குணம் மிக்கனள் என்பர்கொலோ⋆
சில்லை வாய்ப் பெண்டுகள்⋆ அயற்சேரியுள்ளாரும் எல்லே⋆
செல்வம் மல்கி அவன் கிடந்த⋆ திருக்கோளூர்க்கே⋆
மெல்லிடை நுடங்க⋆ இளமான் செல்ல மேவினளே (4)

மேவி நைந்து நைந்து விளையாடலுறாள்⋆ என் சிறுத்
தேவி போய்⋆ இனித் தன் திருமால்⋆ திருக்கோளூரில்⋆
பூவியல் பொழிலும்⋆ தடமும் அவன் கோயிலும் கண்டு⋆
ஆவியுள் குளிர⋆ எங்ஙனே உகக்குங்கொல் இன்றே (5)

இன்றெனக்குத-வாதகன்ற⋆ இளமான் இனிப்போய்⋆
தென் திசைத் திலதம் அனைய⋆ திருக்கோளூர்க்கே சென்று⋆

www.prapatti.com

தன் திருமால் திருக்கண்ணும்⋆ செவ்வாயும் கண்டு⋆
நின்று நின்று நையும்⋆ நெடும் கண்கள் பனி மல்கவே (6)

மல்கு நீர்க் கண்ணொடு⋆ மையல் உற்ற மனத்தனளாய்⋆
அல்லும் நன் பகலும்⋆ நெடுமால் என்றழைத்தினிப் போய்⋆
செல்வம் மல்கி அவன் கிடந்த⋆ திருக்கோளூர்க்கே⋆
ஒல்கி ஒல்கி நடந்து⋆ எங்ஙனே புகுங்கொல் ஓசிந்தே (7)

ஒசிந்த நுண்ணிடை மேல்⋆ கையை வைத்து நொந்து நொந்து⋆
கசிந்த நெஞ்சினளாய்க்⋆ கண்ண நீர் துளும்பச் செல்லுங்கொல்⋆
ஒசிந்த ஒண் மலராள் கொழுநன்⋆ திருக்கோளூர்க்கே⋆
கசிந்த நெஞ்சினளாய்⋆ எம்மை நீத்த எம் காரிகையே (8)

காரியம் நல்லனகள்⋆ அவை காணில் என் கண்ணனுக்கென்று⋆
ஈரியாய் இருப்பாள்⋆ இதெல்லாம் கிடக்க இனிப்போய்⋆
சேரி பல் பழி தூயிரைப்பத்⋆ திருக்கோளூர்க்கே⋆
நேரிழை நடந்தாள்⋆ எம்மை ஒன்றும் நினைத்திலளே (9)

நினைக்கிலேன் தெய்வங்காள்⋆ நெடுங்கண் இளமான் இனிப்போய்⋆
அனைத்துலகும் உடைய⋆ அரவிந்த லோசனனை⋆
தினைத்தனையும் விடாள்⋆ அவன் சேர் திருக்கோளூர்க்கே⋆
மனைக்கு வான் பழியும் நினையாள்⋆ செல்ல வைத்தனளே (10)

‡வைத்த மா நிதியாம்⋆ மதுசூதனையே அலற்றி⋆
கொத்தலர் பொழில் சூழ்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
பத்து நூற்றுள் இப்பத்து⋆ அவன் சேர் திருக்கோளூர்க்கே⋆
சித்தம் வைத்துரைப்பார்⋆ திகழ் பொன் உலகாள்வாரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥